JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 56/2010 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | உமர் கத்தா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 10.01.2025

முதல் விசாரணை
குவிமுச பிரிவு 299 ன் கீழ்

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டலில் வேலை செய்து வருகிறேன். அசா1 மைதீன் வாவா என துஅப்பா. மசூது என்பவர் வெளிநாட்டுக்கு அனுப்புகிறேன் என்று சொல்லி எனக்கும் எனது மச்சினன் செய்யதுக்கும் ஆளுக்கு ரூ70 ஆயிரம் என்"று சொல்லி மொத்தம் ரூ1,40,000 வாங்கினார். மசூது என்பவர் அந்த பணத்தை கேளராவை சேர்ந்த சித்திக் மற்றும் துளசி ஆகிய நபர்களிடம் கொடுத்துள்ளார். அதற்கு பிறகு எல்லாம் தயார் ஆகிவிட்டது வாருங்கள் என்று சொல்லி திருவனந்தபுரம் விமானநிலையத்திற்கு அழைத்தார்கள், திருவனந்தபுரத்தில் பீமா பள்ளியில் இருக்க சொல்லி விட்டு சென்றுவிட்டார்கள். நாங்கள் மொத்தம் 8 பேர்க்கு மேல் அன்றைக்கு சென்றோம். விசா மற்றும் டிக்கெட்டுகளை வாங்கி வருகிறோம் என்று சொல்லிவிட்டு சென்றார்கள், ஆனால் வாங்கி வரவில்லை, மசூதுவை பார்த்து பணம் கேட்டு அலைந்த போதும் பணம் கிடைக்கவில்லை. எனது

அப்பா அவர்களிடம் பணம் கேட்க சென்றிருந்தார் ஆனால் பணம் கிடைக்கவில்லை. மசூது என்பவர் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார்.

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 56/2010 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | மைதின் வாவா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 10.01.2025

முதல் விசாரணை
குவிமுச பிரிவு 299 ன் கீழ்

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் டீ கடையில் வேலை செய்து வருகிறேன். 2008 ஆண்டு எனது மகன் உமர் கத்தாவையும் , எனது மருமகன் செய்யது என்பவரையும் வெளிநாடு அனுப்புவதற்காக நான் மசூது என்பவரிடம் ரூ1,40,000/- மொத்தம் கொடுத்தேன். அதற்கு பிறகு அவர்களை வேலைக்கு அனுப்புகிறேன் என்று சொல்லி விட்டு, திருவனந்தபுரம் பீமா பள்ளியில் அவர்களைஇருக்க சொல்லி விட்டு பாஸ்போர்ட் மற்றும் வீசா, விமான டிக்கெட் வாங்கி வருகிறேன் என்று சொல்லிவிட்டு நிற்க சொல்லிவிட்டு துளசி என்ற நபரிடமும், எர்ணாகுளத்தில் உள்ள சித்திக் என்பவரிடம் அந்த பணத்தை கொடுத்துள்ளார். நான் மசூதுவிடம் பணத்தை கேட்ட போது ஒரு மாதத்தில் தருகிறேன், இரண்டு மாதத்தில் தருகிறேன் என்று சொன்னார். கொட்டாரகரையில் மசூது வேலை செய்து கொண்டிருந்த போதுஅவரை அழைதது சென்று கொண்டு துளசியையும் ,சித்திகையும் பார்க்கலாம் என்று

போன போது அவர்களை இல்லை, தப்பி சென்றுவிட்டார்கள். மொத்தம் 14 பேர் பணம் செலுத்தியுள்ளார்கள, மொத்தம் 7 லட்சம் பணத்தை பெற்று கொண்டுள்ளார்கள், இரண்டு வருடங்கள் அலைந்தும் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை, தற்போது ஒரு வருடத்திற்கு முன்பு மசூது என்பவர் இறந்துவிட்டார்.